

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) சென்னையில் நடை பெற்ற, பேராசிரியர் மருத்துவர் கே.கே. இராமலிங்கம் அவர்களின் 90ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும், முன்னாள் கேரளா ஆளுநருமான பி. சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

### பொன்குமார் தலைமை! முனைவர் கவிஞர் இரவி பாரதி எழுதிய

# ‘தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர்’ நூல்!

### கோ. விசுவநாதன் வெளியிடுகிறார்! கி.வீரமணி - அமைச்சர் மா.சுப்பிரமணியன்-கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ.-டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை!

சென்னை, ஜூலை 15 - முனைவர் கவிஞர் இரவிபாரதியின் தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர் எனம் நூல் வெளியீட்டு விழா இன்று (15.07.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் தியாகராயர் நகர் சர்பிட்டி தியாக ராயர் அரங்கத்தில் (கண்ணதாசன் சிலை எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார் தலைமை வகிக்கிறார்.

வி.ஜி.பி. ரவிதாஸ், டாக்டர் சேதுகுமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கலைமாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார். இளம்பாரி உ. கருணாகரன் தொடக்கவுரையாற்றுகிறார்.

இந்நூலை வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் கவிக்கோ கோ. விசுவநாதன் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

முதல் நூலை டாக்டர் வி.ஜி. சந்தோசம் பெற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

அடுத்து ஐந்து நூல்களை விஜய் வசந்த் எம்.பி., கே.டி.சீனிவாசராஜா, இரவி, ரோமா ராஜன், கே.பி. வித்யாதரன் ஆகியோர் பெறுகின்றனர்.

விழாவில் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் சி.எம். மீனாட்சி சோமசுந்தரம், எழுத்தோவியர் நாணா ஆகியோருக்கு சிறப்பு செய்யப்படுகிறது.

நூலாசிரியர் கவிஞர் இரவி பாரதி விளக்க உரையாற்றுகிறார்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அமைச்சர் மா. சுப்பிர மணியன், கு. செல்வம் பெருந்தகை எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், ஏ.எம். விக்கிரமராஜா, எர்ணாவூர் நாராயணன், வி.பி. கலைராஜன், எஸ். ஜோயல், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பேராசிரியர் ராஜராஜன் நன்றி கூறகிறார். ஜான் தன்ராஜ் நிகழ்ச்சி நெறியாளராக இருந்து தொகுத்து வழங்குகிறார்.

இவ்விழாவினை விழாக் குழுத் தலைவர், விழாக் குழு உறுப்பினர்கள், விழா ஒருங்கிணைப்பாளர் ஒருங்கிணைக்கின்றனர்.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் - மகளிர் சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்!

### சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில் – சுய உதவிக்குழுவினருடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடி ஆய்வு!

**திருவண்ணாமலை, ஜூலை 15 - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரை யாடினார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் காண வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் முதன் முறையாக 1989–ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்து முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் அமைச்சராக, துணை முதல மைச்சராக இருந்தபோது மாவட்டந் தோறும் சென்று லட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கணக்கு புத்தகம் தொடங்கி வைத்து, பொருளாதாரக் கடன், சுழல் நிதிக் கடன் உள்ளிட்டவற்றை வழங்கி பெண்கள், வங்கிகளுக்கு தன்னம்பிக்கையுடன் சென்று தாங்களே வங்கிப்பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு உயர்த்தினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு அமைந்தது முதல் தற்போது வரை தமிழ்நாடு முழுவதும் 1,49,767 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் 53,74,000 உறுப்பினர்களுடன் 4,76,000 மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 19,12,927 குழுக்களைச் சேர்ந்த 2,48,68,051 உறுப்பினர்களுக்கு 1,20,240 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரு முக்கிய அங்கமாக முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10,51,976 மகளிருக்கு 5,125.33 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு, மகளிர் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 16 மகளிர் சுய உதவிக் குழுக்கள், 1 முதியோர் குழு சுய உதவிக் குழு, 1 மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழு என மொத்தம் 18 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 246 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு பல்வேறு நிர்வாக பயிற்சிகளும், வேலைவாய்ப்பு பயிற்சிகளும் அளிக்கபட்டு வேலைவாய்ப்புகள் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று திருவண்ணா மலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்ட மைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

அப்போது இவ்வூராட்சியில் குழு உறுப்பினர்கள் கரும்பு விவசாயம், பூந்தோட்டம், காய்கறி சாகுபடி உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தொழில்களும், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தையல், துணி வியாபாரம் செய்தல் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் சூளகிரி தெற்கு ஒன்றியம் புக்கசாகரம் ஊராட்சி புக்கசாகரம் கிராமத்தில் ஒன்றிய செயலாளர் நாகேஷ் ஏற்பாட்டில் சுமார் 100க்கும் மேற்பட்டோர் மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் மாவட்ட செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், முன்னிலையில் இணைத்துக் கொண்டனர். உடன் மாவட்ட துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வீராரெட்டி, ஒன்றிய செயலாளர்கள் பாக்கியராஜ், கருணாகரன், சின்ராஜ், மாவட்ட வர்த்தக அணி தலைவர் கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாஷ்கவுடா, வெங்கடசாமி, சின்னன்னா, அப்பையப்பா, ரகுராமப்பா, பாபு, லட்சுமி பதி, கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

